# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1952 - 2016 ජනවාරි මස 29 වැනි සිකුරාදා - 2016.01.29

*1952 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 150 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 150 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.*

*3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.*

*5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.*

*6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016.02.29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
*2016, சனவரி 11.*

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | நாவலப்பிட்டி | நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலை உள்ளடங்கலாக நாவலப்பிட்டி பிரதேச செயலகப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

*1-960*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

*2015.07.03 ஆந் திகதிய 1922 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 இற்கான விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் உள்ள முதலாம் மற்றும் மூன்றாம் பந்திகளைப் பின்வருமாறு திருத்தம் செய்கின்றேன் :*

இத்திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகையில் இயந்திரவியல் மற்றும் சிவில் துறைகளில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிலவுகின்ற இரண்டு வெற்றிடங்களுக்கு தகைமையானவர்களைத் தெரிவுசெய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி பின்வரும் அறிவுறுத்தல்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**தொழில்நுட்ப உத்தியோகத்தர் இயந்திரவியல்/சிவில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

*3.* ***சம்பள அளவுத்திட்டம்***.- பயிற்சித் தரத்திற்காக பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006(II) இற்கு இணங்க, மாதாந்தம் 12,920 ரூபாவைக் கொண்ட கொடுப்பனவொன்று வழங்கப்படும். பயிற்சிப் பாடநெறியைச் சிறப்பாகப் பூர்த்திசெய்து தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுமிடத்து பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு இணங்க, சம்பளக் குறியீட்டு இல. MN-3-2006(A) சம்பள அளவுத்திட்டம் : 15,005 ரூபா - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - 27,885 ரூபாவுக்கு உரித்தாகும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

1-1118

---

திருத்தம்

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

2015.07.03 ஆந் திகதிய 1922 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015 இற்கான விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் உள்ள முதலாம் பந்தியைப் பின்வருமாறு திருத்தம் செய்கின்றேன் :

இத்திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகையில் இயந்திரவியல் மற்றும் சிவில் துறைகளில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிலவுகின்ற இரண்டு வெற்றிடங்களுக்கு தகைமையானவர்களைத் தெரிவுசெய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி பின்வரும் அறிவுறுத்தல்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**தொழில்நுட்ப உத்தியோகத்தர் இயந்திரவியல்/ சிவில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

1-1119

---

**விளையாட்டுத் துறை அபிவிருத்தித் திணைக்களம்**

மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பத் தரம் III இற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

(வெற்றிடங்களின் எண்ணிக்கை 2 ஆகும்)

விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பத் தரம் III இன் அலுவலர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் பொருட்டு இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 ***கல்வித் தகைமைகள் :***

1.1.1 சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரு அமர்வில் ஆறு பாடங்களில் (6) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

1.1.2 விஞ்ஞானம்/கணிதம் பாடத் துறைகளுக்குரிய 3 பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரு அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 ***தொழில்சார் தகைமைகள் :***

1.2.1 மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா ;

அல்லது

1.2.2 தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

1.2.3 கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

1.2.4 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

1.2.5 இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் பகுதி I ஐ வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

1.2.6 தொழில் துறைக்கு ஏற்புடையதாக தேசிய தொழில்சார் ஆற்றல் (NVQ) மட்டம் 6 தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

1.2.7 உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில் நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடமிருந்து விபரம் அறிந்து கொண்டதன் பின்னர், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானது என மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழிற் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.3 ***உடற்றகைமைகள் :***

1.3.1 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு எல்லா வகையிலும் உடற்றகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.4 ***ஏனைய தகைமைகள் :***

1.4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

1.4.2 நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

1.4.3 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டு மென விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவிப்பில்/வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் குறித்த தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

1.4.4 ஏதேனும் சமய மதப்பிரிவில் சமயப் பணியின் குருவாக/ துறவியாக உள்ள எவரொருவரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமை பெறமாட்டார்.

2. (i) ***சம்பள அளவுத்திட்டம்***.- 15,005 ரூபா - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885.

(ii) சம்பளக் குறியீடு.- (MN-3-2006-A)

3. **பொதுவான நிபந்தனைகள் :**

3.1 ***வயதெல்லை***.- 2016.01.01 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

3.2 ***ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :***

3.2.1 எழுத்திலான பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலம் ஆட்சேர்ப்புகள் செய்யப்படும்.

3.2.1.1 பரீட்சைத் திட்டம்.- பரீட்சை இரண்டு பாடங்களைக் கொண்ட எழுத்திலான பரீட்சையாகும். இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| வினாத்தாள் | பெற்றுக்கொள்ள முடியுமான புள்ளிகளின் மொத்தம் | சித்தியடைவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் சதவீதம் | காலம் |
|---|---|---|---|
| (i) விவேகப் பரீட்சை | 100 | 40% | 1 மணித்தியாலம் |
| (ii) விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப வினாத்தாள் | 100 | 40% | 3 மணித்தியாலயம் |

*3.2.1.2* ***பாட விதானம் :***

(i) விவேகப் பரீட்சை.- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், சிந்தித்து பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல் தொடர்பாக பரிசீலனை செய்யும் வகையிலான வினாத்தாளாகும் ;

(ii) விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப வினாத்தாள் :

(அ) கட்டிடங்களை நிருமாணித்தல் :

(i) செங்கற்கள் சுவர் (brick wall) மற்றும் கருங்கல் சுவர் (stone wall), மூளைகள் (corner joints), வளைவு (arch), DPC (Dump Proof Couse) லின்டல்ஸ், பிலர்கப்

(ii) காரை பூசுதல் (to plaster with morter), சாந்து பூசுதல், சீமெந்து இடுதல், கொங்கிறீற்றுக் கலவை (Concrete)

(iii) பல்வேறு வகையிலான இணைப்புகள் (Grooving saw, rebating), பொருத்துதல் (Fitting) mammillifor கீழ்ப் பலகைகளைப் பொருத்துதல் மற்றும் பொருத்துதல்கள்

(iv) பல்வேறு வகையிலான கூரைகள் (ஓடு, அஸ்பஸ்டோஸ், தகடு (Corrugated sheets), அலுமீனியத் தகடு, shinghala tiles, தட்டையான கொங்றீற்று)

(v) மண் வேலை (அடைத்தல், மட்டம் தட்டுதல், தரம்)

(vi) சுவர் (retaining wall) மற்றும் நீர்வடிகால் முறைமைகள்

(ஆ) வர்ணம் பூசுதல்.- பல்வேறு வகையிலான வர்ணம் பூசுதல், சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் பலகைகளுக்கு வர்ணம் பூசுதல், வார்னிஷ் பூசுதல், இரும்புத் துருபிடிக்காதவாறு வர்ணம் பூசுதல், நீர் உட்புகா வண்ணம் வர்ணம் பூசுதல்

(இ) பலகை இனங்களை வகைப்படுத்தல், பலகைகளைப் பதனிடுதல், சுவர்களுக்கு மற்றும் நிலத்திற்கு பொருத்தும் டெராஸா floor tile (தரை ஓடு) பொருத்துதல் தொடர்பான அறிவு

(ஈ) வழங்கப்பட்டுள்ள குறிப்புப்படி வேலைகளுக்கான திட்டத்தைத் தயாரித்தல்

(உ) விலைப்பட்டியல்களைத் தயாரிப்பதற்கான செயற்பாடுகள்

(ஊ) அடிப்படை நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சிறிய அளவிலான கட்டிடங்களின் பொருட்டு நீர்க்குழாய்கள், மலசல குழாய்கள் இடுதல், மலசல குழிகளை நிர்மாணித்தல், நீர் அடைப்பு உபகரணங்கள், நீர்த்தாங்கி மற்றும் கிணறுகள் என்பன.

*3.2.1.3* ***பொதுவான நேர்முகப் பரீட்சை.***- எழுத்திலான பரீட்சையின் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும். பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் அழைக்கப்படுவார்கள் (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

**4. தெரிவுசெய்யும் முறை :**

*4.1* எழுத்திலான பரீட்சையின் பெறுபேறுகளின்படி அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கிடையில், நிரப்புவதற்கு உத்தேசிக்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையை, பெறுபேறுகளின் திறமையின் ஒழுங்கு முறைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும். (நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு முடியாத விண்ணப்பதாரிகள் பரீட்சையில் உரிய புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட மாட்டாது.)

**5. விண்ணப்பங்களைத் தயாரித்தல்/விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்தல் :**

*5.1* தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும் ;

*5.2* சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் அந்த மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் ;

*5.3* இந்த அறிவிப்பின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின்படி A4 அளவிலான தாளில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும் ;

5.4 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்கக் கல்லூரியின் அதிபரொருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளரொருவர், பிரசித்த நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியை வகிக்கும் அலுவலரொருவர் அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் தரப்படுத்தலுக்கமைவாக மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தில் அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

5.5 ***தவறான தகவல்களை வழங்குதல்.-*** இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கு எவரேனும் பரீட்சார்த்தி தகைமைகளைப் பூர்த்திசெய்யாதிருத்தல் அல்லது சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல் தவறானதென அறிந்தே சமர்ப்பித்திருத்தல் அல்லது ஏதேனும் முக்கியமான விடயத்தை வேண்டுமெனவே மறைத்திருத்தல் போன்றன தெரியவரின் பரீட்சை நடாத்தப்படுகின்றபோது அல்லது பரீட்சையின் பின்னர் அவரின் பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படுவதற்கும், சேவைக்குச் சேர்ந்த பின்னர் அது பற்றி தெரியவரின் சேவையிலிருந்து வெளியேற்றுவதற்கும் இடமுண்டு.

6. **விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் :**

6.1 விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின்படி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2016.02.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் ;

6.2 விண்ணப்பப்படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் :

பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 9, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7.

6.3 விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பத் தரம் III இற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் ;

6.4 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் நிழற்படப் பிரதிகளை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

7. **விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றலும் அனுமதி அட்டைகளை வழங்குதலும் :**

7.1 உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னர் சரியாகப் பூர்த்திசெய்யப்படாத, முழுமை பெறாத நிலையில் உள்ள விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்படாமையால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

7.2 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போனமை தொடர்பாக செய்யப்படும் எவ்வித முறைப்பாடுகளும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

8.1 இப்பரீட்சை நடாத்தப்படும் திகதி மற்றும் இடம் என்பன தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளிடம் பின்னர் அறிவிக்கப்படும் ;

8.2 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளப்படுதல் வேண்டும். பரீட்சை நிலையத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், அவ்வாறு இல்லாதவிடத்து பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. மேலும், பரீட்சார்த்தி தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

8.3 பரீட்சை நடாத்தல் தொடர்பாக பரீட்சை நடாத்தப்படும் நிறுவனத்தால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்தி இணங்கி ஒழுகுதல் வேண்டும். அந்தச் சட்டதிட்டங்களை மீறினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி ஆளாதல் வேண்டும்.

9. ***பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.-*** பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வண்ணம் விண்ணப்பதாரி தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காகக் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

10. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக விளையாட்டுத்துறை அபிவிருத்திப் பணிப்பாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். எல்லா விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சைச் சட்டதிட்டங்களின்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

*11.* சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மை, ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவிப்பின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*12.* **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

12.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/அநாதைகள்/விதவைகள் தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும் ;

12.2 ***சேவை நிபந்தனைகள்.-*** ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் என்பன ஏற்புடையதாகும்.

*13.* தாம் அறிந்தே சமர்ப்பிக்கும் ஏதேனும் தகவல்கள் பொய்யானதென அறிய வருமாயின் அல்லது விண்ணப்பதாரி வேண்டுமென்றே ஏதேனும் முக்கியமான விடயத்தை மறைத்திருப்பதாக அறிய வருமாயின் அவ்வாறு இல்லாவிட்டால் தகைமையற்றவர் எனச் சேவையாற்றும் காலப்பகுதியில் எச்சந்தர்ப்பத்திலேனும் உறுதிப்படுத்தப்பட்டால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
பணிப்பாளர் நாயகம்.

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,
இலக்கம் 9,
பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7,
2016, சனவரி 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்**

**மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் தரம் III இற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016**

*பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

1\. (அ) முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
உதாரணம் : (GUNAWARDHANA M. G. B. S. K.)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(ஆ) முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) திரு./திருமதி/செல்வி :----.

(இ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ஈ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

2\. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3\. பால் :
ஆண்-0
பெண்-1
☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

4. நிரந்தர முகவரி :

(அ) சிங்களம்/தமிழ் :----.
(ஆ) ஆங்கிலம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(இந்த முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)
(இ) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(ஈ) பிரதேச செயலகப் பிரிவு :----.
(உ) உங்களது தொலைபேசி இலக்கம் :
நிலையான :----.
கையடக்க :----.

5. (அ) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ஆ) 2016.01.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. திருமணமான/திருமணமாகாத :
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

7. தேசிய இனம் :
சிங்களவர்-1, தமிழர்-2, ஏனையவர்கள்-3 ☐
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

8. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.
முதலாவது அமர்வு :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

இரண்டாவது அமர்வு :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. தொழில்சார் தகைமைகள்/ தொழில்நுட்பத் தகைமைகள் (உரிய சான்றிதழ்களில் சான்றுப்படுத்திய பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவும்) :

9.1 பெற்றுள்ள டிப்ளோமா :----.

9.2 உரிய டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் :----.

9.3 உரிய டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :----.

9.4 உரிய டிப்ளோமாவின் (NVQ) மட்டம் :----.

10. ஏனைய தகைமைகள் :----.

11. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தால் தண்டனை பெற்று அல்லது தற்போது உங்களுக்கெதிராக நீதிமன்றத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா ? (ஆம்/இல்லை) :----.

11.1 ஆமெனில் விபரங்களை குறிப்பிடவும் :----.

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகைமையற்றவனாக்கப்படுவேன் எனவும், நியமனம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும், பரீட்சை நடாத்தல் தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதுவித தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் ........................................ என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் .... ................................ ஆந் திகதி என் முன்னிலையில் மேற்படி பந்தி 12 இன்கீழ் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

1-1066

திருத்தம்

**சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா சேவை - வகுதி 2 சேவைத் தொகுதியின் (MN-01-2006A) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

மேற்குறிப்பிடப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பப்படிவங்களைக் கோருவது தொடர்பில் 2016.01.14 ஆந் திகதியிடப்பட்ட 1950 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது :

2. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதி 2016.02.19 ஆந் திகதியாகும். ஏற்கனவே விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

4.4 விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்கின்ற இறுதித் தினத்தன்று வயதானது 18 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் தொடர்ந்தும் மாற்றங்களின்றி அமுலில் இருக்கும்.

சந்திரா விக்ரமசிங்க,
பணிப்பாளர் தலைமையதிபதி.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்,
4 ஆம் மாடி, முதலாம் கட்டம்,
"செத்சிரிபாய",
பத்தரமுல்லை.

1-1127